# ஓராண்டு நினைவு நாள்



## புரட்சிக்கு வித்திட்ட
## எம் தலைவர் **தங்கதுரை**

இரத்தம் தோய்ந்த தமிழ் இன விடுதலையின் வரலாற்றில், **எண்பத்து மூன்று ஜூலை 25ம் நாள்.** ஒரு கரும் புள்ளியாக நிலைத்து விட்டது.

அந்த நாள், கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக எமது இயக்கத்தை வழிநடத்திய எமது தலைவர் தங்கத்துரை அவர்களை சிங்கள இனவெறியர் கோழைத்தனமாகப் பலிகொண்ட ஒரு சோகதினமாகும்.

துக்ககரமான இச்செய்தி கேட்டு, தமிழினத்தின் உணர்வுகளே உறைந்து நின்றது.

போராளிகளும், அவர்களது இலட்சியங்களும், அவர்கள் எந்த மக்களுக்காகப் போராடுகின்றார்களோ, அம்மக்களிடையே அவை நீடுழி வாழ்கின்றன.

எமது மக்களின் விடுதலையுணர்வுகளைப் பிற்போக்குத் தலைமைகள், வெற்று முழக்கங்கள் மூலம் பிழையான வழியில் திசை திருப்பி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்த வேளையில்

> "அடக்கியாளும் வர்க்கம் எதன்மீது நம்பிக்கை கொண்டுள்ளதோ அதனைக் கையாளுவதன் மூலமே, அடக்கப்படும் மக்கள் தேசிய விடுதலை பெற முடியும்."

என்பதை உணர்த்தி திட்டமிட்ட விரிவாக்கப்பட்ட மக்களாயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்.

துப்பாக்கி முனையில் எமது மக்களின் உணர்வுகளை அடிமைப்படுத்திய சிங்கள ராணுவத்துக்கு அதிரடிகள் மூலம் பதிலடி-கொடுத்த "ரெலோஸ்டுக்களை" வழிநடத்திய செயல் வீரர்!

எமது இயக்கத்துக்குரிய இயக்க விதிகளையும், வேலைத்திட்டங்களையும், நடைமுறைப் போர்த்தந்திரங்களையும் வகுத்துக் கொடுத்து எம்மை வழிநடத்திய முற்போக்கு சிந்தனையாளர்!

அவர் விதைத்து விட்டுச் சென்ற லட்சியக் கொள்கைகள், தத்துவத் திரட்டுக்கள் இன்றும் எம்மைச் சரியான வழியில் விடுதலையை நோக்கி விரைவுபடுத்துகின்றன.

மக்களை அணிதிரட்டி, முழுமையான வேலைத் திட்டங்களுடன் விடுதலையை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், புரட்சிக்கு வித்திட்ட என்றும் எமது தலைவர் தங்கத்துரை அவர்களின் மறைவின் ஓராண்டு நினைவாக வீர வணக்கங்களைச் செலுத்திச் சபதமேற்கின்றோம்.

**தாங்கள் காட்டிய இலட்சிய வழியில் செல்லும் நாம் அனைத்து அடக்குமுறைகளையும் தகர்த்தெறிந்தே தீருவோம்.**

எமது தலைவரின் இலட்சியங்கள் அமையப்போகும் தமிழ் ஈழத்தில் நீடூழி வாழும்.